**செய்தி வெளியீடு எண்: 229** **நாள்: 27.03.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று (27.3.2020) காலை 10 மணியளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்புப் பணிகள் குறித்தும், இது தொடர்பாக பல்வேறு துறைகள் மூலம் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோய் தொடர்பாக மாநில அரசு எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகளை மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களிடம் விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

மேலும், மாண்புமிகு பாரதபிரதமர் அவர்கள் மக்கள் நலன் கருதி, 144 தடையுத்தரவினை கடுமையாக கடைபிடிக்க வேண்டும் என்றும், பொதுமக்கள் தங்களை தனிமைப்படுத்திக் கொள்வதை உறுதிசெய்ய வேண்டுமென்றும், மற்றும் பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கூறிய அனைத்தும் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**